2025 – ஆகஸ்ட் மாதம் 28– ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 295/2023 C/w 296/2023*

*2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W2, வரதராஜன் |
| தந்தையார் பெயர் | : | பெருமாள் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது | : | 47 |

**தேதி: 28.08.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது பெரம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து பெரம்பலூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி ஆய்வாளர் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு காவல் பணிக்கு சென்று இருப்பதால் அவரால் இன்று நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. அதனால் நான் அவருக்காக இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன ஆய்வறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். TN 46 Q 5304 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் **மூ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 47 BE 7711 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் **மூ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **மூ.சா.ஆ.3** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. மூ.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் விபத்து சாலையில் மையப்பகுதியில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்குண்டான பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டதாக மூ.சா.ஆ.1 வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் இயக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று மேற்படி ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

TN 47 BE 7711 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் உள்ளதாக மூ.சா.ஆ.2 வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. TN 46 Q 5304 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கை மூ.சா.ஆ.1ல் இருசக்கர வாகனத்திற்கு அபராதம் விதித்ததிற்குண்டான சோதனை குறிப்பாணை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை:— இல்லை.</u>

ஒப்பம்/— கி.முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.